பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

03 03 2025 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பால்வளத்துறையில் நிலைத்தன்மை குறித்த பயிலரங்கை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

2. பீஹார் உள்ளிட்ட 4 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

3. பங்குச்சந்தை முறைகேடு தொடர்பாக செபி அமைப்பின் முன்னாள் தலைவர் திருமதி மாதபி புச் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய மும்பை சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

4. போர்நிறுத்த யோசனையை ஹமாஸ் ஏற்றுக்கொள்ளும் வரை காஸா பகுதிக்கான மனிதாபிமான உதவிகள் நிறுத்தப்படும் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

5. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 44 ரன் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வென்றது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

பால்வளத்துறையில் நிலைத்தன்மை குறித்த பயிலரங்கை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும் அதேவேளையில் பால்பண்ணைத் தொழிலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தப் பயிலரங்கு நடத்தப்படுகிறது.

இந்தப் பயிலரங்கின் ஒரு பகுதியாக பால் கழிவுகளை உயிரி வாயு மற்றும் கரிம உரங்களாக மாற்றும் நிலையான உர மேலாண்மை குறித்த தொழில்நுட்ப அமர்வுகளும் நடைபெற உள்ளது.

மேலும் பால் வளம் தொடர்பான விரிவான வழிகாட்டுதல்களும் வெளியிடப்பட உள்ளது.

<<<<>>>>

இந்தியா – அமெரிக்கா இடையிலான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இன்று அமெரிக்கா புறப்பட்டுச் செல்கிறார்.

வாஷிங்டனில் அவர் அந்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. **Howard Lutnick** உளளிட்டோருடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி அண்மையில் மேற்கொண்ட அமெரிக்கப் பயணத்தின்போது இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தகம் 2030ஆம் ஆண்டுக்குள் 500 பில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்கப்படும் என அறிவித்த நிலையில், திரு. பியூஷ் கோயலின் இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

<<<<>>>>

பீஹார் உள்ளிட்ட 4 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் வரும் ஆண்டுக்கான பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

பீஹார் மாநில பட்ஜெட்டை நிதித்துறைக்கு பொறுப்பு வகிக்கும் அம்மாநில துணை முதலமைச்சர் திரு. சாம்ராட் சவுத்ரி சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்கிறார்.

இதேபோன்று சத்தீஸ்கர் மாநில அரசின் பட்ஜெட்டை அம்மாநில நிதியமைச்சர் திரு. ஓ.பி. சவுத்ரியும், ஜார்கண்ட் மாநில பட்ஜெட்டை அம்மாநில நிதியமைச்சர் திரு. ராதாகிருஷ்ண கிஷோரும் இன்று தாக்கல் செய்ய உள்ளனர்.

இதேபோன்று மகாராஷ்டிரா, நாகாலாந்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசமான ஜம்மு-கஷ்மீரின் பட்ஜெட் கூட்டத்தொடரும் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

பங்குச்சந்தை முறைகேடு தொடர்பான வழக்கில் செபி அமைப்பின் முன்னாள் தலைவர் திருமதி மாதபி புச் மற்றும் அந்த அமைப்பின் உயரதிகாரிகள் மீது முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யுமாறு மும்பை ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தானே-யைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் தொடர்ந்த இந்த வழக்கை விசாரித்த சிறப்பு நீதிபதி திரு. பங்கர், வழக்கு விசாரணையை நீதிமன்றம் கண்காணிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் வழக்கின் விசாரணை தொடர்பான விவர அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

நாடு முழுவதும் உள்ள மத்திய பல்கலைக்கழகங்களில் இளநிலைப் பட்டப்படிப்புகளில் சேர்வதற்கான **CUET** தேர்வு வரும் மே மாதம் 8ஆம் தேதி முதல் ஜூன் ஒன்றாம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் இத்தேர்வுக்கு ஆன்லைன் மூலம் இம்மாதம் 22ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு விண்ணப்பதாரர் அதிகபட்சமாக 5 பாடங்கள் வரை விண்ணப்பிக்கலாம்.

அதற்கு மேற்பட்ட பாடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் இளங்கலை அறிவியல், பொருளாதாரம், ஜவுளித் தொழில்நுட்பம், இசை உள்ளிட்ட பாடப் பிரிவுகளுக்கு மாணவர் சேர்க்கை நடத்தப்பட உள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் தேசிய பிராணிகள் நல வாரியத்தின் கூட்டம் குஜராத்தின் சசான் நகரில் இன்று நடைபெறுகிறது.

மூன்று நாள் பயணமாக குஜராத் சென்றுள்ள பிரதமர், நேற்று பிரசித்தி பெற்ற சோமநாதர் ஆலயத்திற்கு சென்று வழிபட்டார்.

பின்னர் அந்த ஆலயத்தின் அறக்கட்டளை நிர்வாகிகள் கூட்டத்திலும் பிரதமர் கலந்துகொண்டார்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டு மக்களின் நலனுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் சோமநாதர் ஆலயத்தில் வேண்டிக்கொண்டதாக கூறியுள்ளார்.

இந்த ஆலயம் நாட்டின் பாரம்பரியம் மற்றும் நமது கலாச்சாரத்தின் அடையாளமாக திகழ்கிறது என்றும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

இன்று அவர், ஆசிய வகை சிங்கங்களின் சரணாலயமான கிர் தேசிய பூங்காவை பார்வையிடுகிறார்.

<<<<>>>>

மத்திய அரசின் **'Nikshay Shibir'** திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தை காசநோய் இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 5 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு காசநோய் கண்டறியும் பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 58 நொடிகள்)

காசநோய் பாதிப்பு கண்டறியப்பட்டவர்களுக்கு மாவட்ட காசநோய் மையத்தில் இலவச சிகிச்சை வழங்கப்படுவதாக இந்த மையத்தின் மருத்துவ அலுவலர் திரு. கணேஷ்குமார் கூறியுள்ளார்.

<<<<>>>>

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர்நிறுத்த முதற்கட்ட ஒப்பந்தம் காலாவதியானதையடுத்து, ஒப்பந்தத்தை நீட்டிக்க ஹமாசை இஸ்ரேல் அரசு வலியுறுத்தியுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை நீட்டிக்கும் வரை காஸாவிற்கு மனிதாபிமான அடிப்படையில் வழங்கும் உதவிகள் அனைத்தும் நிறுத்தப்படுவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்லாமியர்களின் புனித ரமலான் மாதம் மற்றும் யூதர்களின் விடுமுறையை முன்னிட்டு போர்நிறுத்த ஒப்பந்தத்தை தற்காலிகமாக நீட்டிக்கும் அமெரிக்காவின் முடிவை ஆதரிப்பதாக இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

ஹமாஸ் அமைப்பு இதனை நிராகரித்தால் எதிர்விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் திரு. பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேலின் இந்த முடிவு மிகவும் மோசமான செயல் என்று ஹமாசும், எகிப்து அரசும் குற்றம் சாட்டியுள்ளன.

<<<<>>>>

பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - சீன தைபேயின் **Ray Ho** இணை பட்டம் வென்றது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் அனிருத் இணை **Blake Bayldon – Matthew Christopher Romios** இணையை 6-2, 6-4 என்ற செட் கணக்கில் வென்றது.

ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் **Brandon Holt** 6-3, 6-3 என்ற நேர் செட்களில் ஜப்பானின் **Shintaro Mochizuki**-ஐ வீழ்த்தி பட்டம் வென்றார்.

இதன் மூலம் பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் பட்டம் வென்ற முதல் அமெரிக்கர் என்ற சிறப்பை அவர் பெற்றுள்ளார்.

<<<<>>>>

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா 44 ரன் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வென்றது.

துபாயில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 249 ரன் எடுத்தது.

பின்னர் 250 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 45 புள்ளி 3 ஓவரிலேயே 205 ரன்னுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இந்தியா ஏ பிரிவு புள்ளிப் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

துபாயில் நாளை நடைபெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா – ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் - உத்தரப்பிரதேச அணிகள் மோதுகின்றன.

இப்போட்டி லக்னோவில் இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி சென்னையில் இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>